**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**இரண்டாம் ஆண்டு – மூன்றாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**நவம்பர், திசம்பர் – 2014**

**A031 தமிழக வரலாறு**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

**(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)**

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. இந்தியாவை வட இந்தியா என்றும், தென் இந்தியா என்றும் பிரித்த மலைத்தொடர்கள் எவை?
2. கங்கையாற்றின் அடியில் செல்வங்களைப் புதைத்து வைத்த வடநாட்டு மன்னர்கள் யார்?
3. காவிரி ஆற்றினை மையமாக வைத்து எந்த மன்னர் எழுச்சி பெற்றனர்?
4. மானம் பொறாது சிறையில் உயிர்விட்ட சேரமன்னன் யார்?
5. களப்பிரர் தமிழகத்தை ஆண்ட காலத்தை வரலாற்று ஆசிரியர்கள் எவ்வாறு அழைக்கின்றனர்?
6. தமிழகத்தில் களப்பிரர் ஆட்சியை நீக்கிய பாண்டிய மன்னன் யார்?

7. பிற்காலச் சோழப் பேரரசினைத் தொடக்கி வைத்தவன் யார்?
8. சீவகசிந்தாமணிக்கு அமைந்த வேறொரு பெயர் யாது?
9. பெண் கொடுக்க மறுத்தமைக்காகப் போர் தொடுத்த நாயக்க மன்னர் யார்?
10. தமிழகத்தில் மராட்டிய அரசினை நிறுவிய மராட்டிய மன்னர் யார்?
11. போர்த்துக்கீசியர்களைத் தமிழர்கள் எவ்வாறு அழைத்தனர்?
12. முதல் சுதந்திரப் போராட்டம் என்று எதனைக் குறிப்பிடுகின்றனர்?
13. குழந்தை மணத்தைத் தடுக்கும் சட்டத்தின் பெயர் யாது?
14. தந்தை பெரியார் தோற்றுவித்த இயக்கம் எது?
15. சென்னை மாநிலத்திற்குத் 'தமிழ்நாடு' என்ற பெயரைச் சூட்டியவர் யார்?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.**

**(5x3=15)**

1. நீலகிரி மலைத்தொடர் பற்றிக் குறிப்பு வரைக.
2. சோழன் கரிகாலன் செய்த போர்களைப் பற்றி எழுதுக.
3. முதலாம் நரசிம்மவர்மன் கட்டடக்கலை, சிற்பக்கலை ஆகியவற்றின் வளர்ச்சிக்குச் செய்த தொண்டுகளைக் கூறுக.
4. கோச்சடையன் ரணதீரன் பற்றி எழுதுக.
5. மார்க்கோபோலோ பிற்காலப் பாண்டியர் நாட்டைப் பற்றி எழுதியுள்ள குறிப்புகள் யாவை?
6. இரண்டாம் சரபோஜி கலையரசராக இருந்து அரசாண்டதைப் பற்றி எழுதுக.
7. மருதுபாண்டியர் பற்றிச் சிறுகுறிப்பு வரைக.
8. தமிழகத்தில் விடுதலைக்குப் பின் பல்கலைக்கழகங்கள் வளர்ச்சி பெற்றதை விளக்குக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.** **(3x15=45)**

1. (அ) தமிழக வரலாற்றை அறிய உதவும் இலக்கியச் சான்றுகளை வகைப்படுத்தி விளக்குக.

(அல்லது)

(ஆ) பண்டைத் தமிழர் மேலைநாட்டாருடன் கொண்டிருந்த வாணிபத் தொடர்பு பற்றி விவரிக்க.

2. (அ) சோழ நாட்டை விரிவுபடுத்த முதலாம் இராசேந்திரன் செய்த போர்களைப் பற்றி ஒரு கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) பிற்காலப் பாண்டியரின் ஆட்சியில் நடைபெற்ற உள்நாட்டுப் போரும், மாலிக்காபூர் படையெடுப்பும் பற்றி விவரிக்க.

3. (அ) திருமலை நாயக்கர் பற்றிக் கூறப்பட்டுள்ள செய்திகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

(ஆ) இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட தமிழகத் தலைவர்களுள் எவரேனும் நால்வர் பற்றி விரிவாக எழுதுக.